வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். OS 66/2022

வழக்கு சாட்சி PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மைதிலி | ஜாதி | |
| கணவர்/தந்தை | பாலு | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 52 |

தேதி 20.09.2024

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

முதல் விசாரணை

நான் அசல் வழக்கின் வாதி ஆவேன். எதிர்மனுதாரர்மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் இதர பரிகாரங்கள் கோரி வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். எனது தரப்பு ஆதரவாக சாட்சியத்தினை எழுத்துமூலமான நிரூபண வாக்குமூலமாக இங்கு தாக்கல் செய்கிறேன். அதனை ஒரு பாகமாக ஏற்க வேண்டுகிறேன். எனது தரப்பிற்கு ஆதரவாக 23.12.2004 செட்டில்மெண்ட் பத்திரம் நகல் வா.த.சா.ஆ. 1 ஆகவும், 10.11.2009 சொத்து தொடர்பான வில்லங்க சான்றிதழ் நகல் வா.த.சா.ஆ.2 ஆகவும், 28.10.2016 இறப்பு சான்றிதழ் நகல் வா.த.சா.ஆ.3 ஆகவும், 22.06.2017 குடிநீர் வடிகால் வாரியம் ரசீது நகல் வா.த.சா.ஆ. 4 ஆகவும், 27.04.2019 சொத்து வரி ரசீது நகல் வா.த.சா.ஆ.5 ஆகவும், 31.03.2021 எரிவாயு இணைப்பு ரசீது வா.த.சா.ஆ.6 ஆகவும், 20.01.2022 போலீசிடம் கொடுத்த புகார் மனு நகல் வா.த.சா.ஆ. 7 ஆகவும், மின் கட்டண அட்டை அசல் வா.த.சா.ஆ.8 ஆகவும், ஆதார் அடையாள அட்டை நகல் வா.த.சா.ஆ9 ஆகவும், குடும்ப அட்டை நகல் வா.த.சா.ஆ10 ஆகவும், வாக்காளர் அடையாள அட்டை வா.த.சா.ஆ11 ஆகவும் குறியீடு செய்கிறேன். எனது வழக்கினை ஏற்று எனக்கு ஆதரவாக தீர்ப்பளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.